

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ரைக்கிளீன் செய்வதும்

சன்லைட் டையேர்ஸ் அன் ரைக்கிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: ரைக்கிளீன்



Registerd as - Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (16-4-66) இதழ் 67

பராபவ சித்திரை 3 துல்ஹஜ் பிறை 24 சனிக்கிழமை



பீடிகளில் சிறந்தது!

பீடி உலகில் சிறந்து விளங்குவது முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே.கே.எஸ. ரோட் - யாழ்ப்பாணம.


# உலக தமிழாராய்ச்சி மகாநாடு ஆரம்பம்

## மலேசிய பிரதமர் இன்று தொடக்கிவைப்பார்

### கோலாலம்பூரில் தமிழறிஞர் திரளுகின்றனர்

கோலாலம்பூர், ஏப்ரல்15

கோலாலம்பூரில் நாளை ஆரம்பமாகவிருக்கும் உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் கருத்தரங்கிலும் கலந்துகொள்ளும் அறிஞர்களின் கோஷ்டிகளும் பார்வையாளர் கோஷ்டிகளும் கோலாலம்பூர்வந்துசேர்ந்துகொண்டிருக்கின்றனர். இந்திய அறிஞர் கோஷ்டியினர் நாளைக்காலை இங்கு வந்து சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையிலிருந்து பலர் இங்குவந்துசேர்ந்துவிட்டனர்.

மகாநாட்டு அமைப்பாளர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இங்கு வந்துள்ள அனைவரையும் உபசரிக்கும் ஒழுங்குகளையும் மகாநாட்டு ஏற்பாடுகளையும் சுறுசுறுப்பாகக் கவனித்துவருகின்றனர். செக்கோஸ்லவாக்கியா, அமெரிக்கா மற்றும் பிற நாடுகளிலிருந்து மகாநாட்டில் கலந்துகொள்ளும் அறிஞர் கோஷ்டிகள் பல கோலாலம்பூர் வந்துசேர்ந்து விட்டன. மகாநாட்டை சனிக்கிழமை காலை மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹமான் ஆரப்பித்து வைக்கிறார்,

## பக்தவத்சலம் தலைமையில் 47 அறிஞர் செல்கின்றனர்

சென்னை, ஏப்ரல் 15

சென்னை முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் தலைமையில் 47 பேரடங்கிய தமிழறிஞர் கோஷ்டி ஒன்று சிங்கப்பூருக்கு இன்று காலை புறப்பட்டது.

கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளாக இக்கோஷ்டி கலந்துகொள்ளும்.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கேரளம் ஆகிய ராஜ்யங்களைச் சேர்ந்த பிரபல பேராசிரியர்களும், அறிஞர்களும் இக்கோஷ்டியில் உள்ளனர்.

டாக்டர் மு. வரதராஜன் சிவஞானகிராமணியார், இரா. நெடுஞ்செழியன், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோர் தூது கோஷ்டியில் இருக்கின்றனர்.

## மகாநாட்டு நிகழ்ச்சிகள்

கோலாலம்பூரிலே பல்கலைக்கழகமண்டபத்தில்கூடும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடடின் நிகழ்ச்சிநிரல் விபரம்வருமாறு:-

ஏப்ரல் 14-ந்திகதி வியாழக்கிழமை காலை 10 முதல் மாலை 6வரை பதிவுசெய்யப்பட்டவர்கள் வருகை. அத்தாட்சிப்பதிவுப்பத்திரங்கள்


(2-ம் பக்கம் பார்க்க)


## சோபியா லோறன் திருமணம்

### தாய் மறுப்பு

ரோம், ஏப். 15

பிரபல இத்தாலிய நடிகையான சோபியா லோறன்—கார்லோ பொண்டி என்ற பிரபல திரைப்படத்தயாரிப்பாளரை சமீபத்தில் பாரிஸில் திருமணம்செய்ததாகக் கூறப்படுவதை தாம் மறுப்பதாக சோபியாவின் தாயாரான இக்னேரா ரொமில்டா விலானி பத்திரிகை நிருபரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதற்கிடையில் சோபியா லோறன்தாம் கார்லோபொண்டியை திருமணம் செய்துள்ளதாகத் தமது தாயாரிடமே தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியா

## சீனதூதரகத்தில் 40,000 பேர் ஆர்ப்பாட்டம்

### கட்டிடத்தில் புகுந்து தஸ்தாவேஜுகளுக்கு தீமூட்டினர்

சீன எதிர்ப்பியக்கம் வளர்ந்து வருகிறது

ஜாகர்த்தா, ஏப். 15

அரசியல் கட்சிகளின் கோரிக்கைப்படி இந்தோனேஷியாவில் தேர்தல் நடத்த ஜனதிபதி சுகர்ணோ இணங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தேர்தல் பற்றி பார்லிமெண்ட் விவாதிக்கும் என்றும், அதிபர் சுகர்ணோ அப்போது உரைநிகழ்த்துவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் கடந்த 1955-ம் ஆண்டில்தான் தேர்தல்கள் நடைபெற்றன.

இதற்கிடையில் இந்தோனேஷியாவிலுள்ள சீனப் பிரஜைகள், இந்தோனேஷியா மீது விஸ்வாசம் தெரிவிக்கும்படி கோரப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

சென்றஅக்டோபர்மாதம் தோல்வியுற்ற புரட்சியைத் தொடர்ந்து சீன எதிர்ப்பியக்கம் அங்கு ஆரம்பமானது.

இன்று காலை சீனத் தூதராலயத்தை 40,000 இந்தோனேஷியர்கள் சூழ்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். நூற்றுக்கணக்கானோர் சீனத் தூதராலயத்தில் புகுந்து தஸ்தாவேஜுகளுக்குத் தீமூட்டினார்கள் என அறிவிக்கப்பட்டது.

செனட்டில்

## எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

### குற்றத் தடுப்பு சட்டதிருத்த மசோதா நிறைவேறியது

கொழும்பு, வெள்ளி

குற்றத்தடுப்புச் சட்ட திருத்த மசோதா செனட் சபையில் இன்று பிற்பகல் நிறைவேறியது.

திருத்த மசோதாவை சபையில் நீதிமந்திரி திரு. ஜயமான இரண்டாவது தடவையாக வாசித்தபோது ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த மசோதாவில் பல அம்சங்கள் நீக்கப்பட்டு விட்டதாக அறிவித்தார்.

முன்னறிவித்தலின்றி குற்றத்தடுப்பு சட்ட திருத்த மசோதா சமர்ப்பிக்கப்பட்டதை ஆட்சேபித்து எதிர்க்கட்சிஅங்கத்தவர்கள் வெளியேறினார்கள்.

சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் நீதிமந்திரியாகவிருந்த திரு. ஜி. பி. ஏ. டி. சில்வா மாத்திரம் வெளிநடப்புச்செய்த எதிர்க்கட்சியினருடன் சேராமல் சபைக்குள்ளேயே இருந்தார்.

இம்மசோதா நிறைவேறியதன் பின்னர் உல்லாசப் பிரயாணம் சம்பந்தமான மசோதா ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது.

## கமிஷன் முன் சாட்சியம் அளிக்க டயஸ் மறுப்பு

### தீர்ப்பு கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனுதாக்கல்

கொழும்பு, வெள்ளி

தொலைபேசி ஒற்றுக்கேட்பது சம்பந்தமாக விசாரணைசெய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷன் முன் தம் முன் வந்து சாட்சியமளிக்கும்படி கட்டாயப்படுத்தமுடியாதெனத் தீர்ப்பளிக்குப்படி முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ் மனு ஒன்றை சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல்செய்துள்ளார்.

திரு. டயஸ் இன்று கமிஷன் காரியாலயத்துக்குச் சென்றிருந்தார். ஆனால் சாட்சியமளிக்காமல் சில நிமிடநேரங்களில் திரும்பிவிட்டார். சுப்ரீம்கோர்ட்டில் திரு டயஸ் சார்பில் அவருடைய வழக்கறிஞர் தாகாபக்ஷி மனுவைத் தாக்கல்செய்தார்.

## புதிதாக ஆங்கிலவகுப்புகள் ஆரம்பிக்க முடியாது

### பாடசாலைகளுக்கு கல்வி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

ஆங்கிலத்தில் தொடர்ந்து வகுப்புகள் நடத்தும்உரிமை சில பாடசாலைகளுக்கு வழங்கப்படும். ஆனால் புதிதாக வகுப்புகள் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்று கல்விமந்திரி திரு. ஈரியகொல்லை அறிவித்திருக்கின்றார்.

கனிஷ்ட பாடசாலைகளில் மூன்றும்வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படுவதன்மூலம் மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சிரேஷ்ட பாடசாலைகளில் பட்டதாரிகளைக்கொண்டும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டும் நடத்தப்படவிருக்கும் ஆங்கில போதனை மூலம் மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு விரிவுபடுத்தப்படும் என்றும் மந்திரி கூறியுள்ளார்.

## கார் விபத்து 5 பேர் பலி

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலிருந்து நீர்கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்தகாரொன்று தண்டுகமுவ என்னுமிடத்திலுள்ளபாலத்துக்கருகில் உள்ள மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் ஸ்தலத்திலேயே மர


(6-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

பிறர்க்கு ஈயாமை ஒரு சாபக்கேடு. ஈயாமை நண்பர்களின் விரோதி; சுயநலக்காரர்களின் நண்பன். ஆத்மீக ஈடேற்றத்திற்கு ஈயாதவர்கள் தகுதியற்றவர்கள். பரோபகார உள்ளம் படைத்தவர்கள் உலகில் மிகச் சிலரே. பரோபகார உள்ளத்தின் மூலம்தான் அதிகாரம், சமாதானம் சந்தோஷம் முதலியவற்றை அடைய முடியும்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily, Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 369

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 3 (16-4-66)


## பெருமைதரும தமிழ் மகாநாடு

உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இன்றுமலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ஆரம்பமாகிறது. தமிழ் அறிஞர்கள் மட்டுமல்ல பிறமொழி அறிஞர்கள் பலரும் கலந்து கொள்ளும் இம்மகாநாட்டை மலேஷியப்பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் ஆரம்பித்துவைக்கிறார். தமிழரின் சரித்திரத்தில் முதல் தடவையாக நடைபெறும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடுவெற்றிபெற உலகில் பரந்துவாழும் தமிழ்மக்களோடும், தமிழ் அபிமானிகளோடும் சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.

தமிழ் மொழியின் தொன்மையையும் புதுமையையும் பற்றி இதுவரை மறைவாகப் பழங்கதைகள் பேசிவந்தநாம், 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்க முன்வந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளருக்கும், குறிப்பாக இப்பணியில் முன்னின்றுழைக்கும் தனிநாயக அடிகளாருக்கும், இப்பணிக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கும் மலேஷிய அரசாங்கத்துக்கும் மற்றும் சகலஸ்தாபனங்களுக்கும் தமிழகூறும் நல்லுலகம் என்றும் கடப்பாடுடையது.

இந்த மகாநாட்டின்முக்கிய அம்சம் ஆராய்ச்சிக் கருத்தரங்காகும். தமிழ் மொழியின் சிறப்பு, தொன்மை, பிறமொழி இலக்கியங்களில் அதன் செல்வாக்கு ஆகிய பல்வேறு துறைகளில் தமிழ் அறிஞர்களும் தமிழரல்லாதவற்று நாட்டு அறிஞர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆராய இருக்கின்றனர். தமிழ்ச்சமுதாயத்தின் சரித்திரத்தில் முதல் தடவையாக நடைபெறும் இக் கருத்தரங்கு, உலகுக்கும் உலக பேரறிஞர்களுக்கும் தமிழ் மொழியையும், தமிழ் மொழியின் சிறப்பையும், அதன்மூலம் தமிழர்பண்பாட்டையும். தமிழர் நாகரிகத்தையும் அறிமுகப்படுத்தும் மிகத் துணிச்சலான விஷயமாகும்.

தமிழ் நாட்டிலிருந்தும் ஈழத்திலிருந்தும் தமிழ் அறிஞர்கள் இம்மகாநாட்டிலும ஆராய்ச்சிக் கருத்தரங்கிலும் கலந்துகொள்கின்றனர். இம்மகாநாட்டைப்பற்றியும் கருத்தரங்கு பற்றியும்மகாநாட்டு ஒழுங்குகள், பிரதிநிதிகள் தெரிவுபற்றியும்சில இடங்களில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சில கருத்து வேறுபாடுகள் தோன்றியிருக்கின்றன. தமிழர்கள் மத்தியில் குறிப்பாகத் தமிழ் அறிஞர்கள் மத்தியில் எந்த விஷயத்திலும் கருத்து வேறுபாடு தோன்றுவது புதுமையல்ல சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலத்தில் கூட கருத்து வேற்றுமை இருந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. தமிழ்ச் சமுதாயத்தின் சரித்திரத்தில் முதல் தடவையாக நடைபெறும் இம் முக்கிய மகாநாடும் கருத்தரங்கும் வெற்றிபெற தமிழ் மக்கள், தமிழ் அறிஞர்கள் தமக்குள் எழுந்துள்ள கருத்து வேற்றுமைகளை ஒருபுறம்ஒதுக்கிவிட்டு ஒத்துழைப்பையும ஆதரவையும் அளிப்பார்களென எதிர்பார்ப்போம். மகாநாட்டு நிகழ்ச்சிகள் முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெறும் என்ற தவறான கருத்தும் எழுந்தது. ஆங்கிலத்திலுமதமிழிலும்நடைபெறுமென்றும் தமிழ்மொழியிலேயே ஆராய்ச்சிக்கட்டுரைகள் சில சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன என்றும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்மொழி பற்றி ஆராய்ச்சிக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ள தமிழரல்லாத வேற்றுநாட்டு அறிஞர்கள் தமிழ் மகாநாட்டில் தமிழில் தான்உரைநிகழ்த்தவேண்டுமென்று தமிழர்கள் எதிர்பார்ப்பது சாியல்ல.

கோலாலம்பூரில் இன்று ஆரம்பமாகும் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு உலகெலாம் தமிழோசைபரவும் வகைசெய்வதுடன் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்மக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஆக்குவதிலும் பேச்சு, எழுத்திலுமுள்ள பாரதூரமான வித்தியாசங்களை அகற்றவும் வழி வகுத்துப்பெரும் வெற்றியுடன் நிறைவேறவேண்டும். இதுவே தமிழ்கூறும் நல்லுலகின் ஆசையும், அவாவுமாகும் உலக அறிஞர்களின் கூட்டத்தில் தமிழ்த்துறையை அறிமுகப்படுத்தி அரியணைஏற்றுகிற இம்மாபெரும் முயற்சியைத் தமிழ் மக்கள் உள்ளப்பூரிப்புடன் தலைநிமிர்ந்து, தோள் கொடுத்து, இனிவரும் ஆண்டுகளில் உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் நடைபெறுவதற்கு உதவியும், ஒத்துழைப்புமளிக்க வேண்டும்.

## வைத்தியநிலயத்தில் எலிஸபெத் டெய்லர்

ரோம், ஏப். 15

பிரபல ஹொலிவுட் நடிகை எலிஸபெத் டெய்லர் வைத்திய பரிசோதனைக்காக ரோம் வைத்திய நிலையமொன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஷேக்ஸ்பியரின் ஒரு கதை பற்றிய படப்பிடிப்பில் நடிக்குமுன் மிஸ் டெய்லர் இன்சூரன்ஸ் காரணங்களுக்காக பரிசோதனைக்குள்ளாகியிருக்கிறார். மிஸ் டெய்லர் நல்ல ஆரோக்கியமுடனிருக்கிறார். (பி. டி. ஐ)

## "ஒரே நோக்கோடு ஆசிரியர் பணியாற்றவேண்டும்"

மாங்குளம், வெள்ளி

"தமிழ் மொழியானது இன்று தேய்பிறைபோல் தேய்ந்துகொண்டு போகின்ற நேரத்தில் தமிழ் ஆசிரியராகிய நாங்கள் அதன் இலக்கண, இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும். அதை விடுத்து தமிழ் ஆசிரியர் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொள்கை இலட்சியங்களைக் கொண்டிருந்தால், எமது வருங்காலம் இருள் சூழ்ந்துவிடும். எனவே பல எண்ணச்சிந்தனைகளையும், அரசியல் பூசல்களையும் விடுத்து ஆசிரியர்கள் ஒன்றுகப் பணியாற்றவேண்டும்"

அகில இலங்கை அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முல்லைத்தீவுக்கிளையின் வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது அதன் தலைவர் திரு. பொ. சின்னத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

அன்றைய பொதுக்கூட்டத்தின்போது, தலைவராக கரிப்பட்டை முறிப்பு அரசினர் தமிழ் பாடசாலை தலைமையாசிரியர் திரு. பொ. சின்னத்துரையும், உபதலைவராக பட்டிக்குடியிருப்பு நெடுங்கேணி அரசினர் தமிழ் பாடசாலை தலைமையாசிரியர் திரு. செ. நடராசாவும் கற்சிலை மடு தலைமையாசிரியர் வே. முத்துலிங்கமும், காரியதரிசியாக, சாதலியார் சமனங்குளம் அரசினர் தமிழ் பாடசாலை தலைமையாசிரியர் திரு. மு. சுப்பிரமணியமும், உபகாரியதர்சிகளாக கற்சிலைமடு அ. த. பாடசாலை ஆசிரியர் திரு. எம். சந்திரசேகரமும், அம்பகாமம் அ. த. பாடசாலை தலைமையாசிரியர் திரு. ஆ மயில்வாகனமும் தனாதிகாரியாக, பெரியபுளியங்குளம் அ. த. பாடசாலை தலைமையாசிரியர் திரு. க. செல்லத்துரையும், உப தனாதிகாரிகளாக கற்குளம் அ. த. பாடசாலை தலையாசிரியர் திரு. வீ. இரத்தினசபாபதியும், கணக்குப் பரிசோதகராக வேலன்குளம் அ. த. பாடசாலை தலைமையாசிரியர் திரு. வே. வல்லிபுரமும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக சபை அங்கத்தவர்களாக ஒலுமடு அ. த. சைவப் பாடசாலை ஆசிரியர் இ. வயித்திலிங்கம், மாறு இலுப்பை அ. த. பாடசாலை ஆசிரியர் நா. கந்தையா மாங்குளம் அ. த. பாடசாலை ஆசிரியர் திரு, அ. சண்முகரத்தினம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி கூட்டம் ஒட்டுசுட்டான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

## 3 வருடமாக உலகம் சுற்றும் இளைஞர்

வருடப் பிறப்புத் தினத்துக்கு முதல் இரவு கடைக் கண்காட்சிகளைக் கண்டு ரசிப்பதற்கு யாழ்ப்பாணம் பெரியகடை சென்றிருந்தேன். அங்கு சில நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது முதுகில் யாரோ ஒருவரின் தட்டு விழுந்தது. யாரோ தெரிந்தவராக இருக்குமென சாவகாசமாகத் திரும்பினேன். ஆனால்அங்கு நின்றவர் சுமார் ஆறு அடி உயரமான ஓர் அந்நியர். மேலை நாட்டவர் என்பது தோற்றத்திலும் நடையிலுமிருந்து தெரிந்தது. என்னை ஏன் தட்டினர். முதலில் சிறிது அதிர்ச்சியடைந்தேன். எனினும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள 'யுத் கவுன்சில்'(இளைஞர் கழகம்) எங்கே இருக்கிறது என்று கேட்டபோது ஏதோ தெரியாத இடத்தை விசாரிக்கத் தான் என்னை தட்டினர் என்பது விளங்கியது அவருடன் இரண்டொரு வார்த்தை பேசியபோது அவரது முதுகில் கட்டப்பட்டுக் கிடந்த உடுப்பு படுக்கைகளுடன் ஒரு சுற்றுப் பயணத்துக்கான கதையும் அவருடன் கட்டுப்பட்டுக் கிடப்பது வெளிவந்தது. சிறிது சிறிதாக அவிழ்த்தார் அவருடைய கதை முடிச்சை. அப்போது அவசர அலுவல் எதுவும் இல்லாததால் நானும் யுத்கவுன் சிலுக்கு அவருடனேயே பேசிக் கொண்டு சென்றேன்.

'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்! (நான் ஏற்கனவே தகப்பனாகியிருந்த படியால் தானோ முதலில் இந்தக் கேள்வி வாய்க்கு வந்தது!) அவர் சிரித்துக் கொண்டே 'இப்போதுவயது இருபத்து ஐந்து தானே!' என்றார். 'இபொழுது என்ன அலுவலாக இங்கே வந்தீர்கள்?'

'உலக சுற்றுப்பயணத்தை மேற் கொண்டிருக்கிறேன். வழியில் இலங்கையையும் [illegible] இலங்கைக்கு வரும் பிறநாட்டவர்கள் பலர் யாழ்ப்பாணத்தைப் பார்க்க விரும்புவதில்லை. நீங்கள் யாழ்ப்பாணத்தையும் பார்த்துச் செல்ல எண்ணியது குறித்து மகிழ்ச்சிதான்' என்று கூறி அவர் இங்கு பார்க்க வேண்டிய சில முக்கியமான இடங்களையும் அவருக்கு தெரிவித்துவிட்டு இதுவரை அவர் என்னென்ன நாடுகளுக்கு சென்றிருக்கிறார் என்பதை அறிய ஆவல் காட்டினேன்

தென் ஆபிரிக்கா, லெபனன், பாகிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான் இவையெல்லாம் அவர் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த இடங்கள் அவரது சொந்த ஊரான இங்கிலாந்திலுள்ள சசெக்ஸிலிருந்து வெளிக்கிட்டு மூன்று வருடத்தில் இவையெல்லாம் அவர் சுற்றுப் பிரயாணம் செய்த நாடுகள்.

தென் ஆபிரிக்காவில் தாம் சசெக்ஸில் பார்த்து வந்த அதே தொழிலான 'பிறின்டர்' வேலையை சுமார் 16 மாதகாலம் பார்த்து சிறிது சம்பாதித்துக் கொண்டாராம் 'தென் ஆபிரிக்காவில் இவ்வளவு காலம் இருந்தீர்களே! அங்கு கறுத்தவர்கள் அடிமைகள் போல் நடத்தப்படுவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று அவரைக் கேட்டேன்

இதுவரை மடமடவென்று பதிலளித்து வந்தவர் சிறிது தயங்கினர். ஒரு மனிதன் மற்றவனை அடிமையாக வைத்திருக்கக் கூடாது தான் என்ற கருத்தை கோர்வையற்ற சில தனித்தனி வார்த்தைகளால், தாடியைத் தடவிக் கொண்டே வெளியிட்டார்.

'ரொடீஷியா பற்றி உங்கள் கருத்தென்ன' என்று கேட்டதற்கு 'இதெல்லாம் பெரிய அரசியல் விவகாரம்; இது பற்றியெல்லாம் நமக்கெதற்கு?' என்று மழுப்பினார்.

மூன்று வாரங்கள் வரை இலங்கையில் தங்கியுள்ள திரு. மல்கம்ஹில் இலங்கையின் இயற்கைக் காட்சிகள் தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகக் கூறினார். 'மக்கள்' ஆம், மிகவும் நல்லவர்கள் எனப் புன்சிரிப்போடுபதிலளித்தார். யுத்கவுன்சில்கள் தமது சுற்றுப் பிரயாணத்துக்குப் பெரிதும் உதவியளித்து வருவதாக திரு ஹில் கூறிதமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

—கணேஷ்

## ஐயாறன் எழுதியது

சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் மறைவால் 'ஈழநாடு' ஒரு பெரிய அன்பரை இழந்துவிட்டது. 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையான முதல் அவர் மற்ற ஆங்கிலதினசரி வாங்குவதையும் நிறுத்தி விட்டாராம். ஊர்ச்செய்திகளையும் உலகச் செய்திகளையும் 'ஈழநாடு' உடனுக்குடன் கொடுப்பதால், அது ஒன்றே தமக்குப் போதுமென்றும். முன்னாள் இந்திய ஹைகமிஷனர் கபூர் அவர்களிடம் இப்பெரியார் கூறியதைக் கேட்டேன். எனக்கு சொல்லமுடியாத மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமிருந்தது.

'ஈழநாட்'டை அவரே படிப்பாரா? என்று விசாரித்ததில், மற்றொருவரைக் கொண்டு படிக்கச் செய்து கேட்பதாயும் முதலிலிருந்து கடைசிவரை மிக ஆவலுடன் கேட்பாரென்றும், சிறப்பாக 'ஐயாறன்' பகுதியையும் அதிலுள்ள தேவாரத்தையும் பெரிதும் ரஸிப்பாரென்றும் அறியவந்தேன். யாழ்ப்பாணத்தின் முதுபெரும் கிழவரான (ஜீ. ஓ. எம்.) அவர்களின் பூரண அபிமானமும் ஆசியும் எங்களுக்குப் பெரிய பலமாக இருந்துவந்தது.

வயது 90-க்கு மேலாகியும் அரசியல் முதலிய பொது விஷயங்களில் அவர் அதிக ஊக்கம்காட்டி வந்தார். ஞாபகசக்தி மிக அதிகம். மனம் மிக சுறுசுறுப்பாகவும் தெளிவாகவும் இருந்தது. நீண்ட ஆயுள், ஆரோக்கியம் இவற்றின் ரகசியமென்ன? என்று கேட்டதற்கு. "எல்லாம் தெய்வச்செயல்தான்" என்று அடக்கமாகச்சொல்லிவிட்டார்.

பெரியார் யோகர் சுவாமிகளைப்பற்றி சேர் அவர்கள் 'ஈழநாடு'க்கு மட்டும் விசேஷ பேட்டி அளித்து, தமது அனுபவங்களைத் தெரிவித்திருந்தார். இவ்விரு பெரியார்களும் இப்போது மேலுலகிலே சந்தித்து அளவளாவக் கூடும். ஈழ அன்னை அளித்த தவப்புதல்வர்களில் ஒருவரான சேர் வைத்திலிங்கம் அவர்களின் ஆன்மா சாந்தி பெற்று பேரின்பநிலை அடைந்திருக்கு மென்பதில் ஐயமில்லை.

ஃ ஃ ஃ

கொழும்பிலே பஸ்ஸில் சென்று கொண்டிருக்கையில் இலங்கை வானொலி தமிழ் இசைக்கலைஞர் ஒருவரைச் சந்தித்துசுகமவிசாரித்தேன். முகம்வாடியிருப்போல் இருந்தது. என்ன காரணமென்று கேட்டதற்கு, வானொலியில் தங்கள்பெயர்களை அறிவிக்கையில், 'அவர்கள்' என்ற மரியாதைச் சொல்லை பல்லாண்டுகளாகப் பாவித்து வந்ததாயும் இரண்டொரு மாதமாக அதைஅகற்றிவிட்டதாயும், வெளி கலைஞர்களுக்கு அந்தமரியாதை அளிக்கையில், தங்கள்பெயர்களை மட்டும் மொட்டையாகமரியாதையில்லாமல் அறிவிப்பதாயும், இதனால் வானொலி தமிழ்ப்பகுதியிலுள்ள எல்லா இசைக்கலைஞர்களுக்கும்மனதுக்கு மிக வேதனையென்றும் தெரிவித்தார்.

சிங்களப்பகுதியில் எப்படி என்று கேட்டதற்கு'மகதா'

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிபர் அரீபும், பதின்மரும் பலி!**

# ஈராக்கில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

# விமானவிபத்தில் பலியான அதிபருக்கு அரபுநாடுகள் துக்கம்

## இன்று இறுதிச் சடங்கு; பாக்தாத்நகரில் அமைதி

பாக்தாத், ஏப்ரல் 15

**அதிபர் அரீப் உயிரிழந்ததை அடுத்து, ஈராக்கில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இரவுநேர ஊரடங்கு மட்டும் இன்றுமுதல் தளர்த்தப்பட்டது.**

ஈராக்அதிபர்அரீப் பிரயாணம்செய்தஹெலிகோப்டர் விமானம் நாட்டின் தென் பகுதியான பஸ்ராவுக்கருகில் பாலைவனப் புயலினால் விபத்துக்குள்ளாகியது. அவருடன் சென்ற 10 பேர்களும் விபத்தில் உயிரிழந்தனர். 2 மந்திரிகள், ஒரு மாவட்ட கவர்னர் ஆகியோர் இதில் அடங்குவர். அதிபரினதும், இதர தலைவர்களினதும் சடலம் பாக்தாத்துக்குக் கொண்டுவரப் பட்டது. நாளை இறுதிச் சடங்கு நடைபெறும்.

அதிபர் காலமானதைத் தொடர்ந்து உடனடியாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இன்றுமுதல் இரவு 7 மணியிலிருந்து காலை 4 மணி வரை அது அமுலிலிருக்கும்.

### அரபுநாடுகள் துக்கம்

அதிபர் அரீபின் மரணத்தை முன்னிட்டு எல்லா அரபு நாடுகளும் அதிர்ச்சியடைந்தன. கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிட்டும், மற்றவகையிலும் எல்லா நாடுகளும் துக்கம் அனுஷ்டித்தன.

அரபு நாட்டு ரேடியோ நிலையங்கள் நிகழ்ச்சிகளை ரத்துச் செய்து குர்ஆனை ஒலிபரப்பின. பாக்தாத்திலும் அலெக்ஸாண்டரியாவிலும் மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. தற்போது கெய்ரோவிலிருக்கும் குவாய்த் மன்னர் தமது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்தார்,

குவாய்த்தில் 3 நாள் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஐக்கிய அரபியக் குடியரசு, அல்ஜீரியா ஆகிய நாடுகள் 7 நாட்கள் துக்கதினமாகவும், ஈரானில் 5 நாள் துக்கதினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

### அனுதாபச் செய்திகள்

ரஷ்ய ஜனாதிபதி பொட்கொர்னி, இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் உட்பட எல்லா அரபு உலகத் தலைவர்களும் தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

### ஒரு வாரத்தில் புதிய அதிபர்

ஈராக் பிரதமர் தற்காலிகமாக அதிபரின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஈராக் அரசியலமைப்பின்படி இன்னும் 7 தினங்களில் புதிய அதிபர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

காலஞ்சென்ற ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புமந்திரியும் அதிபர் பதவிக்குப் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டது. அரீபின் மரணச் செய்தி கேட்டபின் ரஷ்யா சென்றிருந்த அவரது சகோதரர் உடன் நாடு திரும்பினார்.

### இன்று இறுதிச் சடங்கு

நாளை நடைபெறவிருக்கும் ஈராக் அதிபரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்திய மத்தியமந்திரி திரு. மனுபாய்ஷா பக்தாத் புறப்பட்டார்.

பாக்தாத் நகரம் இப்போது அமைதியாக இருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

# 5 மாதங்களுக்குள் தென் வியட்னும் பொதுத்தேர்தல்

## சைகோனில் 20,000 பௌத்தர்கள் வெற்றி ஊர்வலம்

சைகோன், ஏப். 15

**தென்வியட்னமில் பொதுத்தேர்தல் நடக்கும் வரை ராணுவ ஆட்சி நீடிக்குமா இல்லையா என்பது பற்றி முடிவு செய்யாமலேயே பிரதமர் கீ கூட்டிய அரசியலமைப்பு மகாநாடு முடிவடைந்தது.**

இப்போதைக்கு ராணுவ ஆட்சியே நீடிக்கவேண்டுமென மகாநாட்டில் பெரும்பாலான பிரதிநிதிகள் கருதிய போதிலும், பௌத்தர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆனால் இன்னும் 3 அல்லது 5 மாதங்களில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமென பிரதமர் கீ விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து, சைகோனில் நேற்று 20,000 பௌத்தர்கள் வெற்றி ஊர்வலம் நடத்தினார்கள்.

அதேசமயம் பிரதமர் கீ உடனடியாக பதவியை விட்டு விலகவேண்டும் அல்லது மந்திரிசபையில் தீவிர மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என பௌத்தர்கள் கூறுகிறார்கள். தேர்தல வரை கீ அரசாங்கத்தை ஒப்புக்கொள்ளமாட்டோம் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

ஸ்பெயினில்

### நிரந்தர யு. எஸ். விமான அணி

மாட்றிட், ஏப், 15

அமெரிக்காவின் மூன்று ஜெட் விமானப்படை அணிகள் ஸ்பெயினியில் நிரந்தரமாக வைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. மாறிட்ட்டுக்கருகில் இவை நிலைகொண்டிருக்கும்.

### அம்பேத்கார் 75-வது ஜயந்தி

புதுடில்லி, ஏப்.15

காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்காரின் 75-வதுபிறந்ததினம் பல இடங்களில் கொண்டாடப்பட்டது, டில்லியில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் அவருக்கு [illegible] முரைகள் வழங்கப்பட்டன.

ஒ.வ்க

### கென்யா உப ஜனாதிபதி ராஜினாமா

நைரோபி, ஏப்ரல் 15

கென்யா உப ஜனாதிபதி ஒடிங்காவின் ராஜினாமாவை அதிபர் கென்யாட்டா ஏற்றுக்கொண்டார்.

திரு ஒடிங்கா ஆளும் கட்சியான கென்யா ஆபிரிக்க தேசிய யூனியன் கட்சியிலிருந்தும் ராஜினாமாச் செய்துவிட்டார்.

திரு. ஒடிங்காகம்யூனிஸ்ட் ஆதரவாளர் எனக் கருதப்படுபவர் அரசாங்கத்தை வெளிநாட்டு லட்சியத்துக்கு மாற்ற முயல்வதாக திரு. ஒடிங்கா மீது குறைகூறப்பட்டுள்ளது.

### எண்ணெய்க் கப்பல்கள்நிலை

லிஸ்பன், ஏப்ரல்15

மொஸாம்பிக்கில் பேரா துறைமுகத்தில் ரொடீஷியாவுக்கு எண்ணெயுடன் நிற்கும் 'ஜோவானா5' என்ற கப்பலை போர்த்துக்கேய அதிகாரிகள் சுவீகரித்ததாகஅறிவிக்கப்படுகிறது

அதேசமயம் தென்னாபிரிக்க டர்பனில் நங்கூரமிடப் பட்டிருக்கும் 15000டன் கப்பலான மனாலாவுக்கு, எண்ணெயை இறக்க அரசாங்கம் அனுமதிக்காதுஎனக்கருதப்படுகிறது.

இவ்விஷயமாகப் பேசும் பொருட்டு பிரிட்டிஷ் பிரதிநிதி ஒருவர் தென்னாபிரிக்கா சென்றிருக்கிறார்.

### முக்கூட்டு யோசனை

வாஷிங்டன், ஏப். 15

ஜெனரல் டிகாலின் நேட்டோ பகிஷ்காரம்பற்றி அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் இன்று ஆலோசனை நடத்த ஆரம்பித்தன,

### அப்துல்லாவை விடுவிக்கவும்

புதடில்லி, ஏப்.15

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வதன்மூலம், டாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்கு நல்லெண்ணம் காட்டவேண்டுமென ஜயப்பிரகாஷ் நாராயண் கூறியிருக்கிறார்.

### ஜோன்ஸன்

மெக்ஸிக்கோ, ஏப்ரல் 15

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று மெக்ஸிகோவில் ஆபிரகாம் லிங்கனின் சிலை ஒன்றைத் திறந்து வைத்தார். இச்சிலை அமெரிக்காவினால் மெக்ஸிக்கோவுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

### நேரு பொருட்காட்சி

தார்எஸ்ஸலாம், ஏப்ரல் 15

தன்ஸானியா தலைநகர் தார்எஸ்ஸலாமில் இன்று நேரு பொருட்காட்சி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

### ஜயப்பிரகாஷ்

புதுடில்லி, ஏப்ரல் 15

ஸ்ரீஜயப்பிரகாஷ் நாராயண் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென காங்கிரஸ் விரும்புவதாக தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தோனேஷியா

### சீனர்களை வெளியேற்ற புதிய இயக்கம்!

ஜாகர்த்தா, ஏப்ரல்15

இந்தோனேஷியாவிலுள்ள சீனர்களை வெளியேற்ற மாபெரும் இயக்கம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

மாணவர்களின் ஆதரவுடன் தேசியவாதிகள் இதை நடத்தவிருக்கிறார்கள்,

இதற்கிடையில் பெருமளவு சீனர்கள்வசிக்கும் மேடாங்கில் சீனர்களுக்குச் சொந்தமான பள்ளிக்கூடங்களும், கடைகளும் மூடப்பட்டு, 38,000 மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

# வருகிற 19-ம் திகதி முறப்பட பிரதமருக்கு ஒழுங்குகள்

லண்டன், ஏப். 15

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா வருகிற 19-ம் திகதி இலங்கை புறப்படுவார் என ஹைகமிஷன் அதிகாரிகள் அறிவித்தனர்.

அவர் மேலும் ஒரு வைத்திய பரிசோதனை செய்துகொண்டார் என்றும், ஹைகமிஷன் இல்லத்தில் ஓய்வு பெற்றுவருகிறார் என்றும் மேலும் அவர்கள் கூறினர்.

திரு. டட்லி நேற்று ஒரு வைத்திய நிபுணரிடம் பரிசோதனைக்குச் சென்றபின், ஆஸ்பத்திரிக்கும் சென்றார்.

வருகிற 19-ம் திகதி பிரதமர் இலங்கை புறப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஹைகமிஷன் அதிகாரிகள் அறிவித்தனர்.

# கிழக்கு பாகிஸ்தானுக்கு சீனத்தலைவர்கள் விஜயம்

## ஜனாதிபதி அயூப் வரவேற்பு

டாக்கா, ஏப்ரல் 15

சீன ஜனாதிபதி லியூஷாசியும், வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீயும் இன்று கிழக்கு பாகிஸ்தான் வந்து சேர்ந்தனர்.

சீனத்தலைவர்களின் பாகிஸ்தான் விஜயத்தில் இது இரண்டாவது கட்டமாகும். சென்றமாத இறுதியில்தான் அவர்கள் மேற்கு பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தனர்.

டாக்கா விமான நிலையத்தில் சீனத்தலைவர்களை ஜனாதிபதி அயூப்கான் வரவேற்றார்.

விமான நிலையமும், சீனத்தலைவர்கள் சென்ற பாதைகளும் கோலாகலமான அலங்காரங்களுடன் காட்சியளித்தன. 'சீன பாகிஸ்தான் நட்பு நீடூழி வாழ்க' என்ற கோஷங்கள் எங்கும் காணப்பட்டன

சீனத்தலைவர்களைவரவேற்பதில் அனைவரும் பங்கு கொள்ளும் பொருட்டு, எல்லா அரசாங்கக் காரியாலயங்களும், பாடசாலைகளும் இன்று மூடப்பட்டிருந்தன.

டாக்காவுக்கு விசேஷ ரயில்களும், பஸ்களும் விடப்பட்டன.

### கடத்தல் புகார்: யு. எஸ். மறுப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 15

டோக்கியோவிலுள்ள ரஷ்ய ராஜதந்திர ஊழியர் ஒருவரை அமெரிக்காகடத்த முயன்றதான சோவியத் குற்றச்சாட்டை ராஜாங்கா இலாகா மறுத்திருக்கிறது.

### துருக்கர்—கிரேக்கர் மோதல்

நிக்கோஸியா, ஏப்ரல் 15

சைப்ரஸ் துருக்கர்களுக்கும் கிரேக்கர்களும் நேற்று கடும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கியதாக அறிவிக்கப்பட்டது.

கேரளத்தில்

### 70 இடதுசாரிகள் விடுதலை

புதுடில்லி, ஏப்ரல் 15

கேரளத்தில் மேலும் 70 இடதுசாரிகளை விடுவிக்கும்படி மத்திய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. இது வரை மொத்தம் 89 பேர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முன்னாள் மந்திரி ஸ்ரீமதி கே. ஆர். கௌரி, ஸ்ரீமதி கோபாலன் ஆகியோர் விடுதலையான சிலர்.

திரு. ஏ. கே. கோபாலன் திரு. நம்பூதிரிபாத் ஆகியோர் இன்னும் காவலில் இருந்துவருகிறார்கள்.

### ரொடீஷியா

ஸாலிஸ்பரி, ஏப்ரல் 15

ரொடீஷியாவில் அரசாங்கக் கட்சியிலுள்ளவர்களுக்கும், ஆளும் கட்சி வலதுசாரிகளுக்குமிடையே பிளவு மனப்பான்மை நிலவுவதாக அறிவிக்கப்பட்டது.

### தங்கக் காப்பை திருட முயன்றாராம்

ஒருவர் கைது

யாழ்ப்பாணம், சனி

கோவில் தேர்த்திருவிழாவின் போது ஒரு சிறுமியின் தங்கக்காப்பைத் திருட முயன்ற ஒருவர் பொலிஸாரின் உஷார் நடவடிக்கையினால் கையும் களவுமாகப் பிடிபட்டார்.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவின்போது ஒரு சிறுமியின் கையிலிருந்து தங்கக் காப்பொன்றைத் திருட முயன்றது சம்பந்தமாக ஆனைக்கோட்டைப் பொலிஸார் சந்தேகத்தின் மீது பியசேன என்பவரைக் கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர். (ந. நி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்ளூர்உற்பத்திப்பொருள்களுக்கு ஊக்கமளிக்க திட்டம்

கொழும்பு, வெள்ளி

உள்ளூர்உற்பத்திப் பொருள்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசாங்கம் சகல வித நடவடிக்கைகளையும் எடுக்கவிருக்கிறது. இதனை முன்னிட்டு கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் உதவியளிக்கவிருக்கிறது இவர்கள் உள்ளூர் உற்பத்திப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவிருக்கிறது.

இந்த வகையில் இலங்கையில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கும் வெளிநாட்டுஇறக்குமதியாளர்களுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தவும் இலங்கையில் உற்பத்தியாகும் பொருள் பற்றி வெளிநாடுகளில் விரிவான பிரசாரம் செய்யவும் முதலில்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாடுகளில் விற்பனைசெய்யக்கூடியவகையில் வர்த்தகர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவும் அரசாங்கம் ஏற்றஒழுங்குகளைச் செய்யவிருக்கிறது.

## மேயர் மீது அவநம்பிக்கை

பதுளை, வெள்ளி

பதுளை மேயர் மீது அவநம்பிக்கை தெரிவித்து மாநகரசபையின் எட்டு அங்கத்தவர்கள் ஒரு பிரேரணையை கமிஷனரிடம் தாக்கல் செய்துள்ளனர்.

பிரேரணையைக்கொண்டுவர விசேஷ கூட்டமொன்றைவிரைவில் கூட்டுமாறு அவர்கள் கமிஷனரைக் கோரியுள்ளனர்.

பதுளை மாநகர சபையின் மொத்த அங்கத்தவர்கள் பதினைந்து பேராகும். தற்போதைய மேயர் மூன்று மாத காலம் பதவிவகித்து வருகிறார்.

## 2 மாதகால வேலைநிறுத்தம் முடிவு

நுவரெலியா, வெள்ளி

ஒலிபண்ட் தோட்டத்தில் கடந்த மாதகாலமாக நடைபெற்றவேலை நிறுத்தம் முடிவடைந்திருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் ஆகியவற்றைச் சேர்ந்த 1,200 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

## தேர்த் திருவிழா

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்த்திருவிழா நேற்றைய தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கால விசேட அபிஷேகமும் மாலை பூஜையும் இடம் பெற்றன. பெருந்திரளான மக்கள் தேர்த்திருவிழாக் காட்சியைக்கண்டு தரிசித்தனர்.

## பஸ் விபத்து: 8 பேர் காயம்

பதுளை, வெள்ளி

பதுளை — மட்டக்களப்பு ரஸ்தாவில் சேவையிலீடுபட்டுக் கொண்டிருந்த ஒரு இ. போ. ச. பஸ், பாதையைவிட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ் சாரதி, கண்டக்டர் உள்ளிட்டு எட்டுப்பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மகாஓயா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# 'முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பே காரணம்' பிரிவுபசாரக்கூட்டத்தில் பேச்சு

மட்டக்களப்பு, வெள்ளி

'மட்டக்களப்பு மாவட்ட மொழிவழித் தொழிற்சங்கங்களின் காரியதரிசியாக கடமையாற்றிய திரு. அ. புவனேசன் அவரது ஐந்து ஆண்டுச்சேவையில் மிகவும் பொறுப்பாக பல கடமைகளை செய்துள்ளார். அவர் வயதில் குறைந்தவராயிருந்தபோதிலும் தொழிற்சங்க முறைகளில் பலமுன்மாதிரியான ஆக்க வேலைகளையும் செய்துள்ளார்' என மட்டக்களப்பு தொழிற்கந்தோரிலிருந்து கொழும்பு தலைமைக்காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. புவனேசனின் பிரிவுபசாரக்கூட்டத்தில் பேசும்பொழுது அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு.செ. கோடீஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. புவனேசன் மட்டக்களப்பு மாவட்ட மொழிவழித்தொழிற்சங்கங்களின் செயலாளராகவும், மட்டக்களப்பு அரசாங்க எழுதுவினைஞர் சங்க கிளைச்செயலாளருமாக கடந்த ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தார் என்பது குறிப்படத்தக்கது.

மேலும் திரு. கோடீஸ்வரன் பேசுகையில்,தொழிற்சங்கங்கள் இன்று பல நோக்கங்களுடன் தோன்றிய போதிலும் ஒரு சில சங்கங்களே தொழிற் சங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன என குறிப்பிட்டார்.

திரு. புவனேசன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தொழிற் சங்கங்களின் முன்னேற்றத்திற்கு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பேபெரும் காரணமாகும் என்றார்.

## சனசமூகநிலையத்தில் புதுவருடவிழா

யாழ்ப்பாணம், சனி

'ஒரு காலத்தில் கல்வி ஒருசிலரின் ஏகபோக உடமையாக இருந்தது. இப்போது நிலைமை மாறிவிட்டது கல்வி கற்கவேண்டுமென்ற ஆவல் இப்போது எல்லோரிடமும் எழுந்துளது. இதனால் கிராமங்கள் தோறும் நூல்நிலையங்களை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அறிவுவளர்ச்சிக்கு இந்த நூல்நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன என்றே சொல்லலாம்.'

இவ்வாறு உரும்பராய் வடக்கு கணேச சனசமூக நிலயத்தில் நடைபெற்ற புதுவருட தின விழாவில் நீர்வேலி கிராமசபைஅங்கத்தவரான திரு. சி. கனகசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. த. சிவப்பிரகாசம் பேசுகையில் கூறியதாவது:

பிள்ளைகள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருக்கவேண்டும். பெற்றோரும் நல்ல ஒத்துழைப்புத் தரவேண்டும்.

நீர்வேலி கிராமசபைத் தலைவர் திரு. கே. குலசிங்கம் பேசுகையில் இம்முறை புதுவருடவிழா சிறப்பாகக் கொண்டாட முடிந்ததற்கு இறைவனது நற்கருணையும் இளைஞர்களின் உழைப்புமே காரணம் எனக் கூறினார்.

விழாவில் இரட்டையர் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

## குருபட்டவிழாவில் பாராட்டு

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா எம்.ஜே. மரியாம்பிள்ளையின் 25-வது வருட குருப்பட்டவிழா சமீபத்தில் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த வைபவத்தில் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். பழைய மாணவர் சார்பில் வழக்கறிஞர் திரு. என். ரி. சிவஞானம், ஆசிரியர்கள் சார்பில் திரு. ஆ. சபாரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

வண. பிதா மரியாம்பிள்ளை தமிழ்ப்பற்றுமிக்க அதிபராக இருப்பதோடு சேவைத் திறனும், சமய அனுட்டானமும் நிறைந்தவர் என ஆசிரியர் திரு. ஆ. சபாரத்தினம் பாராட்டுரை வழங்கினார்.

## மாணவர்கள் இரத்ததானம்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை வர்த்தக கல்லூரி, இக் கல்லூரியின் வரணிக் கிளை ஆகியவற்றைச் சேர்ந்த 25 மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை இரத்ததானம் செய்தனர்.

திரு. வி. வேலுப்பிள்ளை மேற்கொண்ட ஒழுங்குகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி நடமாடும் இரத்த வங்கி அங்கு சென்றிருந்தது.

## புதுவருட விழா

கைதடி, வெள்ளி

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆதரவில் கைதடி மூர்த்தியாவத்தை மடத்து சந்தசாமி கோவில் முன்றலில் புதுவருட விழா நடைபெற்றது. இவ்விழாவில் விரிவுரைகள், பக்திப்பாடல்கள் முதலியன இடம்பெற்றன.

## தேர்தல் ஆட்சேப மனு

பதுளை, வெள்ளி

கடந்த பொதுத்தேர்தலில் பதுளைத் தொகுதியில் திரு. பி. எச். பண்டார வெற்றிபெற்றதை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட தேர்தல் மனுமீதான வழக்கு பண்டாரவளை நீதிமன்றத்தில் இம்மாதம் 20-ம் திகதி விசாரணைசெய்யப்படும்.


நல்ல காலம் வருகுது!
நல்ல காலம் வருகுது!




உங்கள் வீடு தேடிவரும் சன்லைட் மங்கையிடம்

10/-ரூபாய்

பரிசு

பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை, ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினால் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாயாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினால் உடனே அவர் உங்களுக்கு 10/-ரூபாய் பரிசு கொடுப்பார்.

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினால் செய்து, சுத்தமான பிரகாச மான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்.

சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்.




JWT/S/4x56 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பகுதி

## சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி

### யாழ். கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்தின் மூன்ருவது வருட யாழ்ப்பாணக் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று பிற்பகல் ஆரம்பமானது.

நேற்று பிற்பகல் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் முதலாவது போட்டி ஆரம்பமானது. மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. சாவகச்சேரி கோஷ்டியை சேர்ந்த மாசிலாமணி, சம்பந்தர் திறமையாக விளையாடினுர்கள். திரு வி. வைத்திலிங்கம் மத்தியஸ்தராக கடமையாற்றினுர்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு கேடயங்கள் பரிசாக வழங்கப்படும்.

இக்கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவில் கலந்து கொள்ளும் கோஷ்டிகள்:

தெல்லிப்பளை ஒலிம்பிக் விளையாட்டு கழகம், சுன்னுகம் உடுவில் ஸ்ராஸ், அச்சுவேலி சென்றல் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை படங்குத்துறை விளையாட்டுக் கழகம்.

'பி' பிரிவில் கலந்து கொள்ளும் கோஷ்டிகள்:

கோப்பாய் கலைமணி விளையாட்டுக் கழகம், அல்வாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி றிபேக் விளையாட்டு கழகம், நல்லூர் விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகம்.

---

கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

## 'ஏ' பிரிவில் இமையாணன், 'பி' பிரிவில் கரணவாய் வெற்றி

வல்வட்டித்துறை, வெள்ளி

அல்வாய் இந்து வாலிபர் சங்கத்தினரால் கடந்த மாதம் 19-ந் திகதி முதல் நடாத்தப்பட்டு வந்த முதலாவது ஆண்டு கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் புதுவருடத்தினத்தன்று நடைபெற்றன.

இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டிகளின் 'ஏ' பிரிவில் உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகத்திற்கும் இந்து வாலிபர் சங்கத்திற்குமிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் இமையாணன் கழகம் மூன்று ஆட்டங்களிலும் முறையே 15-12, 15-2, 15-12 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது. இப்போட்டிகளுக்கு திரு எஸ். கதிர்காமநாதி மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

'பி' பிரிவில் கரணவாய் சிவா இளைஞர் கழகத்திற்கும் துன்னுலைக் குறையினிங் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் கரணவாய் சிவா இளைஞர் கழகம் முறையே 15-7, 15-10 5-15 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டிக் கொண்டது.

இப்போட்டிக்கு சி. பாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## சாவகச்சேரி கோஷ்டி வெற்றி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக்கும், பளை இளைஞர் கோஷ்டிக்குமிடையில் சிநேகிதபூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில், சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ் பேரின்பநாயகம், மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### யாழ். உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், புதுவருடத்தினத்தன்று நடைபெற்ற போட்டிகளில் குருநகர் புனிதவளன் 'பி' பிரிவுக்கோஷ்டியும் நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' பிரிவுக்கோஷ்டியும் முதலில் மோதிக் கொண்டன. இடைவேளையின் போது புனிதவளன் கோஷ்டியினர் ஒரு கோலும் பெருதவகையில் சென். மேரீஸ் கோஷ்டியினர் 2 கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் இக்கோஷ்டியினர் 3 கோல்களை வெளுத்து வாங்கினர். இப்போட்டி முடிவில் சென். மேரீஸ் கோஷ்டியினர் புனிதவளன் கோஷ்டியினரை 5—0 கோல்களால் வெற்றியீட்டினர்.

இதையடுத்து நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான போட்டியில் யாழ் 'கிறீன் பீல்ட்' கோஷ்டியினரும் சென். ஜோசப் கோஷ்டியினரும் மோதினர். இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவுவரை மிகவும் விறுவிறுப்பாகவும், ரசிப்பாகவும் காணப்பட்டது. இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் இருசாராருமே விட்டுக்கொடுக்காமல் விளையாடினர் முதலில் 'கிறீன் பீல்ட்' கோஷ்டியின் முன்னணி வீரர் ஒருவர், இடதுகரை வீரர் தேவராசாவின் உதவியுடன் ஒரு கோலை அடித்திருந்தார். இதையடுத்து சில நிமிடங்களின் பின்னர் சென். ஜோசப் கோஷ்டியும் ஒரு கோலை அடித்தது இடைவேளையின் முன்னர் நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டியும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன. இடைவேளைக்குப்பின்னர் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றன.

போட்டி முடிவில் இரு கோஷ்டியும் தலா இவ்விரண்டு கோல்களைப் பெற்றதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

---

# விளம்பரம்

**அரசாங்க கேள்விப்பத்திரங்கள்**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

என் 760 - யாழ்ப்பாண உப - பிரிவிலுள்ள விசுவமடுக்குளம் முதலாம், இரண்டாம் கட்டை இடதுபக்க வாய்க்காலும், கோட்டை கட்டினகுளம் முதலாம் கட்டை இடதுபக்க வாய்க்காலும் வெட்டுதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 10-5-66. இதன் முழு விபரங்களுக்கும் 15-4-66இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். 2350

---

### நாகர்கோவில் எழுதுமட்டுவாள் ரோட் வேலை 1965 – 1966

மேற்படி வேலை செய்வதற்கு உள்ளூராட்சிப் பகுதியில் - பிரிவில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்துகுடத்தனைக் கிராமச் சபைத் தலைவரால் 21-4-66-ம் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் 18-4-66-ம் திகதி காலை 8-30 மணி தொடக்கம் மு. ப. 15 மணி வரையும் எமது கி. ச. கந்தோரில் கேள்விப்பிணைப் பணம் ரூபா 25/-ம் கேள்விப் பிணைப்பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தி அதற்குரிய மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. குறித்த வேலையைச் செய்வதற்கு (Bulldozer) என்னும் பாரமுள்ள இயந்திரம்தேவைப்படுகிறது. வேலை விபரங்களை எமது கி. ச. கந்தோரிலும், யாழ்ப்பாணம் உதவி ஸ்தலஸ்தாபன கந்தோரிலும் அறிந்து கொள்ளலாம்.

நீ. யோ. மரியாம்பிள்ளை,
கி. ச. தலைவர்,
குடத்தனை.

கி. ச. கந்தோர்,
குடத்தனை, 11-4-66. 129

---

### கேள்வி விளம்பரம்

(1) ஒப்பந்த வேலை: 1-ம் வட்டாரம்தச்சகடவை தெரு அமைத்தல்.

(2) கேள்விப் பத்திரம்,
1 கொடுத்தல் 23-4-66 பி.ப 1 மணிவரையும்.
2. ஏற்றல் 24-4-66 பகல் 11மணிவரையும்.

(3) தகுதி:
1. ஏ, குரூப் ஒப்பந்தகாரர்கள்.
2 கேள்விப் பத்திரப் பணம் ரூபா 50/-
3. கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் 05/-

(4) விபரங்கள் அறிதல்,
1. யாழ்ப்பாணம் (வடபகுதி) உள்ளூராட்சி உதவி அதிபர் அலுவலகம்.
2. புத்தூர் கிராமசபை அலுவலகம்.

சி. நடராசா,
அக்கிராசனர்
கி. ச. புத்தூர்.

கிராமசபை அலுவலகம்,
புத்தூர், 7-4-1966. 130

---

## சென். பீட்டர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

நவாலி சென் பீட்டர்ஸ் கோஷ்டிக்கும் அராலி சில்வஸ்ரார் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நவாலி சென் பீட்டர்ஸ் கோஷ்டி வெற்றிபெற்றது. சென் பீட்டர்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த வீரர்களான அல்பிரெட், தங்கராசா, பெனடிக்ற் தர்மசீலன், இராசமணி சிலுவைராசா, அடைக்கலம் ஆகியோர் திறமையாக விளையாடியிருந்தனர்.

---

**வலிகாமம் வடக்குப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெல்லிப்பளை**

இச் சமாசத்திற்குப்

### பொருள் பொறுப்பாளர் தேவை

எஸ். எஸ். சி. சித்தியடைந்த 25-40 வயதுக் குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கூட்டுறவுப் பயிற்சி, வியாபார அனுபவம் என்பன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும். விண்ணப்பிப்பவர்கள் வலிகாமம் வடக்கு வாசிகளாகவே இருக்க வேண்டும்.

சம்பள விகிதம்
175 - 375
20X10

விகிதம் அளிக்கப்படும். பிணை ரொக்கம் 1500/- ரூபாவும், ஆதனப்பிணை 5000/- ரூபாவும கொடுக்க வேண்டும்.

விண்ணப்பக்காரர்கள், சுன்னுக அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்ப மாதிரிப் பத்திரங்களில் 30-4-66-ம் திகதிக்குமுன் பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கவும்.

இங்ஙனம்
கூட்டுறவு சேவையிலுள்ள
க. நாகலிங்கம்.
கௌரவ காரியதரிசி
வலி-வட.பல.நோ.கூ.ச.
சமாசம்,

தெல்லிப்பழை.
12-4-66. 132

---

### JAFFNA ACADEMY
**Chundicully**

New term commences on 6-5-66

Admission cards for present students & new admissions on 6th & 7th May 66.

Lectures from 9-5-66

Following courses will be provided:

1. G. C. E (OrdLevel)Arts & Science.
2. G. C. E. (Adv. Level & U. E.)Science. 1966.
3. G. C. E. (Adv Level. & U. E.) Science 1967
4. Electrical Engineering Practice (City & Guild's) Preliminery.
5. Electrical Engineering Practice Intermediate
6. Electrical Engineering Practice Final.
7. Surveying & Levelling (Licence Surveyor's Exam)
8. Draughtmanship & Building Constuction. (Authorized draughtman's) & City & Guild's examination)
9. Evening classes in Sinhalese for students and others can be arranged.

115 Director.

---

## வாலிப முன்னணி விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் புதுவருட விளையாட்டு விழா, விக்னேஸ்வரா கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. இப்போட்டிகள் 18-ம் திகதி வரை நடைபெறும். உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம், நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார். தேசிய சேவை, விளையாட்டு உதவி அமைச்சர் திரு. டி. பி. வெலகெதர இறுதிநாள் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறுர்.

---

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

# வரிவிளம்பரம்

### தேவை

கொந்தருத்து முறையில் கொழும்பில் உழவு மெசின் ட்ருக்டரில் மண் எடுத்துச் செல்வதற்கு ட்ருக்டர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் லாறிகள் ட்ருக்டர் லைசென்ஸ் உள்ளவர்களாயிருக்கவேண்டும். அத்துடன் ரொக்கமாக பிணைப்பணமும் கட்டவேண்டும். விபரங்களுக்கு: சே. சண்முகம், 86, அவிசாவளை வீதி' வெல்லம்பிட்டியா. 211

ஒரு வைத்தியசாலைக்கு உதவியாளாக 14—20 வகுதுக்குட்பட்ட ஒரு பையன் தேவை. சம்பளத்துடன் இருப்பிட வசதியும், சாப்பாடும் கொடுக்கப்படும். இம்மாதம் 24-ம் தேதிக்கு முன்னர் நேரில் விண்ணப்பிக்கவும். நாதன், கண் வைத்தியசாலை, அளவெட்டி 221

கிளிநொச்சி - பரந்தன் கண்டி வீதியில் அல்லது கண்டி வீதியிலிருந்து 1/4 மைல் உள்ளே, 1/2—1 ஏக்கர் காணி தேவை. விபரங்களுடன் கீழ்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சி. கமலநாதன், C/o T. கனகசுந்தரம், சிவன் கோவில் ரோட், திருநெல்வேலி. 224

பெற்ரேல் விநியோக நிலயங்களுக்கு முகாமையாளர்கள் (மனேச்சர்) தேவை. விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூ. 2000/- ஏ.எஸ்.சங்கரப்பிள்ளை அன் பிரதர்ஸ் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பர இலக்கம் 222 'ஈழநாடு' மேற்பார்தது என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 222

கல்மடுக்குளம் மத்திய வகுப்புத்திட்டத்தில் 4 துண்டு கமங்களில் பயிர் செய்விப்பதற்கு, குறைந்த பட்சம் ஐந்துவருட விவசாய அனுபவமும், நடுத்தர வயதுமுடைய திடகாத்திரமான ஒருஆள் தேவை. 1-5-66க்கு முன் விண்ணப்பிக்கவும் M.M.T.P., 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 223

### விற்பனைக்கு

யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் ஒரு கல்வீடும் இரண்டு பரப்பும் மூன்று காணித்துண்டுகளும், கிட்டத்தட்ட இரண்டு பரப்பு விற்பனைக்குண்டு. தபால் கந்தோர் வியூ, தெல்லிப்பழை. 225

யாழ்ப்பாணத்தில் கொழும்பு ஸ்ருடியோ இரட்டை மாடிக்கட்டிடம். மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குண்டு. திருமதி V. சுப்பிரமணியம், 'செல்வஸ்தான்', கோட்டடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 220

### கல்வி

விவேகானந்த கல்வி நிலையம் தெல்லிப்பழை, G C.E. (O. L; A. L.) கலைவிஞ்ஞான வகுப்புக்கள் சிங்கள வகுப்புக்கள் 15-4-66 முதல் ஆரம்பமாகின்றன. சேருங்கள். 215

### வைத்தியம்

**தொய்வு, சுசம், நீரிழிவு**

கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று சுகியமடைந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு தரம் குறைந்த பால் விநியோகம்?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சிறுவர்களுக்கு பால் நிலையங்களால் வழங்கப்படும் பால் தரம் குறைந்ததாகவும், சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக்கூடியதாகவும் இருப்பதாக சுகாதார சேவை அதிபருக்கும் யாழ்ப்பாண மேயருக்கும் யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் புகார்செய்துள்ளனர்.

நாட்பட்ட பாலை குளிர் சாதனப் பெட்டியில் வைத்திருந்து காய்ச்சாது பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதாகவும் இதன்விளைவாக இதனை அருந்தும் பிள்ளைகளுக்கு வயிற்ருேட்டம் போன்ற வியாதிகள் வருவதாகவும் வரியிறுப்பாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

இதுசம்பந்தமாக மேயர் சுகாதாரப் பகுதியுடன் ஆலோசனை நடத்தி நடவடிக்கை எடுத்துவருவதாக அறியப்படுகிறது. (ந.நி)

REGAL--JAFFNA
NOW SHOWING!
Jack Palance
Anita Ekberc
in
THE MONGOLS
(Supertotal scope - Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-40க்கு மட்டும்
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பச்சை விளக்கு
கலரி 50 சதம்.

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

## கார்...!.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணமாயினர்.

விபத்துக்கு உள்ளான காரில் இரண்டு இலக்கத் தகடுகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அதனுல் அது திருடப்பட்ட காராக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

பொலிஸ் தகவலின்படி விபத்துக்குள்ளான கார் சமீபத்தில் கட்டான என்னும் இடத்தில் காணமற்போன ஆஸ்டின் கேம்பிரிட்ஜ் என்றும் அதில் காணப்பட்ட இலக்கத்தகடு வெள்ளவத்தை வாசியான ஒருவரின் ஸ்கூட்டரிலிருந்த இலக்கத்தகடு என்றும் தெரிகின்றது. இறந்தவர்களில் ஒருவர் சில திருட்டுச் சம்பவங்களின் நிமித்தம் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த மைக்கல் பெர்னண்டோ என்றும் அட்டனில் ஆப்கானியர் ஒருவரின் ஒன்றரை லட்சம் ரூபா திருட்டு போனது சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த மற்ருெருவரும் மரணமாகியிருப்பதாக அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

## ஐயா றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றமரியாதைச்சொல்லைக் கலைஞர்களின் பெயர்களுடன் அறிவிப்பதாகச்சொன்னுர். ஏன் வானொலியிலுள்ள தமிழ் இசைக் கலைஞர்களை மட்டும் இப்படிஅவமதிக்கவேண்டும்? 'அவர்கள்' என்று பல்லாண்டுகளாக அறிவித்து வந்ததைத் திடீரென மாற்றக்காரணமென்ன? மாதச்சம்பளத்தில் பதிலாக இருப்பது ஒரு பாவமா? இழுக்கா? கலைஞர்களிடையே எக்காரணம்பற்றியும் இவ்வித விஷயங்களில் வேற்றுமை காட்டுவது கூடாது. இது கலாதேவிக்குச்செய்யும் பாவமுமாகும். வெளி கலைஞர்களை 'அவர்கள்' என்று சொல்லிவிட்டு, பக்கவாத்தியம் வாசிக்கும் நிலையவித்வான்களின் பெயர்களை மொட்டையாகச் சொல்லி அவமதிப்பது. வீணைஅவர்களிடையே அதிருப்தியையும் மனக்கசப்பையும் ஏற்படுத்துவதாகும். கலைஞர்களுக்குக்காசு பணம் கூட அவ்வளவு பெரிதல்ல. அன்பும் ஆதரவுமே முக்கியமாகும். யாரோ ஒரு அற்ப, சின்னபுத்திஆசாமிதான் இந்தப் பெரியதவறைச் செய்திருக்கவேண்டும். வானொலி அதிகாரி உடன் இதை கவனித்து, தமதுநிலையவித்வான்களுக்குச் செய்யப்படும் இந்த அவமதிப்பை நீக்குவாரென்றே நம்புகிறேன். இது பெரிதாகி, விபரீத விளைவுகள் ஏற்படுமுன், தக்கபரிகாரம் செய்யப்படவேண்டும்.

அவர்கள் என்று நிலைய வித்வான்களைத் தொடர்ந்து மரியாதையாக அழைப்பதால் யாருக்குஎன்ன நஷ்டம்?

ஃ ஃ ஃ

முன்னியாநின்ற முதல்வா போற்றி மூவாத மேனியுடையாய் போற்றி, என்னியா யெந்தை பிரானே போற்றி யேழிசையே யுகப்பாய்போற்றி, மன்னியமங்கை மணாளா போற்றி மந்திரமும் தந்திரமுமானுய்போற்றி, கன்னியார் கங்கைத் தலைவா போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி.

— அப்பர் அடிகள்

## 'மகளிர் கல்லூரி தனியாகவேண்டும்'

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் சென்ற செவ்வாய்க்கிழமை திரு. அ. வயித்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது உரும்பராய்க் கிராமப்பெண்களுக்கென ஓர் தனியான கல்லூரி வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்துச் சபை முகாமையாளர் திரு. எஸ். வேலுப்பிள்ளை உரை நிகழ்த்துகையில், 'வளர்ச்சியடைந்துள்ள கல்லூரிகளில் போதிய வசதிகள்பெற்று இயங்கிவரும் உரும்பராய் இந்துக்கல்லூரிக்கு பெற்ருேர்-ஆசிரிய சங்கமும் பழைய மாணவர் சங்கமும் நல்ல ஒத்துழைப்பளித்துள்ளன என்பதை அறிய தாம் மிக்கமகிழ்ச்சி கொள்வதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், வகுப்பறைப்பாடங்களோடு மாத்திரம் பிள்ளைகள் இருந்துவிடக்கூடாது என்றும் பாடசாலைக்குவெளியிலும் தமக்கு உதவக்கூடிய முயற்சிகளிலீடுபட்டு அவர்கள் உழைக்கவேண்டுமென்றும் கூறிஞர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. தியாகலிங்கம் கியு. சி., தலைவர்: திரு. அ. வயித்திலிங்கம், செயலாளர்: திரு. க. வை. [illegible] பொருளாளர்: திரு. ரி, விவேகானந்தன். பத்துப் பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# பொருளாதாரத் துறையில் முன்னேறவேண்டும்

## புத்தாண்டு விழாவில் எம். பி.

வல்வெட்டித்துறை, வெள்ளி

''பல வருடங்களுக்குப் பின்னர் இவ்வருடப் புத்தாண்டை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்ரேம், தேசிய ஐக்கியம் நிலவுவதற்கு நாம் எடுத்துள்ள முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கின்றன இது போல நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும்'' என்று அல்வாய் வடக்கு தமிழரசுக் கட்சியின் புதுவருடவிழாவில் பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் பேசுகையில் கூறிஞர்

விழாவுக்கு திரு எம் வேலும்மயிலும் தலைமை வகித்தார் திரு க துரைரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

''தேசிய அரசாங்க ஆட்சியில் நாம் வாழ்ந்து வருவதால் எங்கள் வாழ்வு நாட்கள் செல்லச் செல்ல வளம் பெறும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்ரேம் நமது நாடு பொருளாரத்தில் குறைவாக இருப்பதால் பொருளாதார வளர்ச்சிக்கு அயராது உழைக்க முற்படவேண்டும் நம் வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது இதனை ஓரளவு குறைத்துக்கொள்வதற்கு வாலிபர்கள் ஈடுபடுதல் வேண்டும் நமது நாட்டிலும் பார்க்க சிறிய நாடான இஸ்ரேலில் உள்ள பல அறிவாளிகள், உத்தியோகத்தை நம்பியிராது வேளாண்மை, கூட்டுப்பண்ணை போன்ற பல தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். அங்கு விஞ்ஞானிகள், டாக்டர்கள், பட்டதாரிகள் ஆகியோர் பண்ணைகளை நடத்துபவர்களாக இருக்கிருர்கள். அவர்கள் உயர்வு, தாழ்வு மனப்பான்மையற்றவர்களாக வாழ்ந்து வருவதாலேதான் இஸ்ரேல் நாடு இன்று பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்து வருகிறது''

வழக்கறிஞர் க ஜெயக்கொடி பேசுகையில், தமிழ் பேசும்மக்களின் இன்னல்களைப் போக்குவதற்காக தமிழரசுக்கட்சி பாடுபட்டு வருகிறது என்றும் தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சி மீது வைத்த நம்பிக்கையின் நிமிர்த்தம் இன்று நாம் புத்தாண்டு விழாவை ஒற்றுமையுடன் கொண்டாடுகின்ரேம் என்றும் கூறிஞர்.

வட, கிழக்குமாகாணங்களை தேசிய அரசாங்கத்தின் உதவியுடன் எதிர்காலத்தில் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமுடியும் என்றும் அவர் கூறிஞர்.

## உலக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுதல்.

15-ந் திகதி வெள்ளிக்கிழமைகாலை10 முதல் மாலை 6வரை கோலாலம்பூர், பெடாலிங், நாயா இவ்விடங்களில் சுற்றுப்பிரயாணம். மாலை 6-30முதல் 9-30வரை பிரதிநிதிகளுக்கும், வரவேற்புக்கமிட்டி மெம்பர்களுக்கும் விருந்து.

16-ந்திகதி சனிக்கிழமை காலை 10-30 முதல் பகல் 1 மணிவரை மகாநாடு ஆரம்ப விழா. கோலாலம்பூர், பலாய் புதயா, திவான், பகஸா, தான்புஸ்தகா என்னுமிடத்தில் மலேஸியா பிரதம மந்திரி ஆரம்பித்துவைப்பார்.

உலகதமிழ்ஆராய்ச்சிமகாநாட்டு காரியக்கூட்டம்.

17-ந்திகதிஞாயிறு ஓய்வு நாள்.

18-ந்திகதி திங்கள் காலை 10முதல் மாலை 5 வரை பொதுச்சபை கூட்டமும் உப குழுக்கள் கூட்டங்களும் இரவு 8முதல் 10 வரை கோலாலம்பூர் நகரமண்டபத்தில் கலைவிழா நிகழ்ச்சிகள்.

19-ந் திகதி செவ்வாய்: காலை 10 முதல் மாலை 5வரை பொதுச்சபைக் கூட்டமும் உபகுழுக்கள் கூட்டமும், ஆராய்ச்சித்திட்டங்கள் பற்றிய விவாதம்.

பிரதமமந்திரி, பிரதிநிதிகளுக்கு அளிக்கும்உபசாரம்.

20-ந் திகதி புதன்: காலை 10 முதல் மாலை 5 வரை பொதுச்சபை. உபகுழுக்கள் கூட்டம். மாலை ஓய்வு.

21-ந் திகதி வியாழன்: காலை 10 முதல் மாலை 5வரை பொதுச்சபை, உபகுழுக்கள் கூட்டம், ஸ்தானிகராலய நண்பர்கள் விருந்துபசாரங்கள்.

22-ந்திகதி வெள்ளி: காலை 10 முதல் மாலை 5 வரை பொதுச்சபை. உபகுழுக்கள் கூட்டம், இரவு 7முதல் 11 வரை பார்லிமெண்ட் மண்டபத்தில் விருந்து, மகாநாட்டு வரவேற்பு சபையினர் அளிப்பது.

23-ந் திகதி சனிக்கிழமை பூர்த்திவிழா.

## சேவைநலம் பாராட்டு

சுழிபுரம், வெள்ளி

பண்ணகம் வடக்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தலைமையாசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய, திரு. அ. கார்த்திகேசுவின் சேவைநலனைப் பாராட்டி ஓர் பாராட்டு விழா அவ்வூர் பொதுமக்களால் நடாத்தப்பட்டது.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு திரு. க. ஏகாம்பரம் தலைமைவகித்தார். அன்னரின் சேவையை பாராட்டி பலபிரமுகர்கள் பேசினர். அ. கார்த்திகேசு தமக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப்பேசினுர்.

தேவை

சாவகச்சேரியில் லிமிற்ரெட் கம்பனிக்கு மனேஜர் குமாஸ்தாக்கள் தட்டெழுத்தாளர் தேவை. மனேஜர் பதவிக்கு பட்டதாரி விரும்பத்தக்கது. விளம்பர இல. 227 C/o ஈழநாடு. விண்ணப்பிக்கவும். 227

## மரண அறிவித்தல்

மலாயன் பென்சனர் ஆறுமுகம் சின்னையா கந்தரோடையில் காலமாகிவிட்டார். இவர் தபாற்கந்தோர் சேமவங்கியைச் சேர்ந்த தியாகராசா, யாழ்ப்பாணம் சின்னத்துரை பிரதேஸ் நடராசா, திறைச்சேரியைச் சேர்ந்த மகாதேவன், கந்தரோடை சப்போஸ்மாஸ்டர் கணேசவேல், திருமதி நவரத்தினம் ஆகியோரின் தந்தையும், குடியேற்ற அதிகாரி நவரத்தினம், திருமதி தியாகராசா திருமதி மகாதேவன் ஆகியோரின் மாமனுமாவர். அன்னரது பூதவுடல் இன்று சனி (16-4-66) பிற்பகல் 3 மணியளவில் கந்தரோடை இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைகளுக்காக 'சங்கம் புலவு' மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். 228

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா ஸ்ரீகிருஷ்ணு மொடேர்ன்
(மட்டக்களப்பு) (திருகோணமலை) (பதுளை)
மொடேர்ன் விஜிதா தீவொளி
(பண்டாரவளை) (ஹட்டன்) (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
ஸ்ரீவிஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org